பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
21 07 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

## ஆகாஷவாணி செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்றத்தில் நடப்பு மழைக்கால கூட்டத் தொடர் வெற்றி கொண்டாட்டத்துடன் தொடங்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- எதிர்க்கட்சிகள் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
- ஏர் இண்டியா விமான விபத்து குறித்து சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு இன்று மாநிலங்களவையில் விளக்கமளித்தார்.
- பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய த ரெசிடன்ட் ஃப்ரண்ட் அமைப்பை அமெரிக்க வெளியுறவுத் துறை வெளிநாட்டு தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளது.
- நடப்பு ஆண்டுக்கான ஃபிடே உலகக்கோப்பை செஸ் போட்டிகள் இந்தியாவில் நடைபெறும் என்று சர்வதேச செஸ் சம்மேளனம் அறிவித்துள்ளது

*--- இனி விரிவான செய்திகள் ---*

நாடாளுமன்றத்தில் நடப்பு மழைக்கால கூட்டத் தொடர் வெற்றி கொண்டாட்டத்துடன் தொடங்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இன்று காலை நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், இந்திய ராணுவத்தின் வலிமையை ஒட்டுமொத்த உலகமும் உற்றுநோக்குவதாக கூறினார்ட.

இந்திய ராணுவம் மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது 100 சதவீத இலக்குகளும் எட்டப்பட்டு விட்டதாக தெரிவித்தார்.

தீவிரவாத அமைப்புகளின் சதித்திட்டங்கள் அனைத்தும் 22 நிமிடங்களில் முறியடிக்கப்பட்டு இந்தியா சாதனை படைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் உள்நாட்டு தயாரிப்புகளை கொண்டே செயல்படும் புதிய ராணுவ கட்டமைப்பை உலகம் பார்த்து வியந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நடப்பு மழைக்கால கூட்டத் தொடரில் நாடாளுமன்றத்தின் இருஅவைகளிலும் ஆபரேஷன் சிந்தூரின் வெற்றிக் கொண்டாட்டம் பிரதிபலிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராணுவ ஆராய்ச்சி புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் ராணுவ தளவாட உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், நடப்பு கூட்டத் தொடர் அமையும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த கூட்டத் தொடரை ஆக்கப்பூர்வமாக நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

>><><><><<

நாட்டின் நலனையும் மக்களின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் முக்கிய பொறுப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளதாக மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளை சுமூகமாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஆக்கப்பூர்வமான விவாதங்களும், ஜனநாயக ரீதியில் ஆரோக்கியமான கருத்துக்களும் அவையில் இடம்பெறச் செய்து உள்ளார்ந்த வளர்ச்சிக்கு அனைவரும் வித்திட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சமூக நீதியையும், பொருளாதார வளர்ச்சியையும் அடிப்படையாக கொண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நடப்பு மழைக்காலக் கூட்டத் தொடர் அர்த்தமுள்ளதாகவும், சிறப்பானதாகவும் அமையும் என தாம் நம்புவதாகவும் மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா கூறியுள்ளார்.

>><><><><<

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து மக்களவையில் இன்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விவாதம் நடத்தக்கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு அவைத் தலைவர் திரு ஓம் பிர்லா அனுமதி மறுத்தார்.

இதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக மக்களவை நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோதும் அமளி நீடிக்கவே பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

>><><><<

மாநிலங்களவையில் மழைக்காலக் கூட்ட தொடரின் முதல்நாளான இன்று அசாம் மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு புதிய உறுப்பினர்கள் பதவியேற்றனர்.

அவைத்தலைவர் திரு ஜெக்தீப் தன்கர், அசாம் கனபரிஷத்தின் சார்பில் வெற்றிபெற்ற திரு பீரேந்திர பிரசாத் பைஸ்யா, பிஜேபி சார்பில் வெற்றிபெற்ற திரு **Kand Purkayastha** ஆகிய உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

மாநிலங்களவையில் நியமன உறுப்பினர்கள் டாக்டர் மீனாட்சி ஜெயின், திரு சதானந்தன் மாஸ்டர், திரு ஹர்ஷ்வர்தன் சிரிங்லா ஆகியோருக்கும் அவைத் தலைவர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

பின்னர் வழக்கமான நடவடிக்கைகள் தொடங்கிய போது, பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதிக்க வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதற்கு அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து, அவர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து மாநிலங்களவை நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடிய போது சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு ஏர் இண்டியா விமான விபத்துக் குறித்து விளக்கமளித்தார்.

எதிர்காலத்தில் இதுபோன்ற எந்தவொரு விமான விபத்தும் நடைபெறாத வகையில், அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

>><><><<

நாடாளுமன்ற அலுவல் பட்டியல் இன்று முதல் தமிழ், தெலுங்கு மலையாளம் உள்ளிட்ட 10 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரை இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நாடாளுமன்ற அலுவல் பட்டியல் வெளியிடப்பட்டு இருந்தது.

>><><><<

தமிழகத்தில் கால்நடைகளை பாதுகாப்பதற்காக 16 இடங்களில் கால்நடை பன்முக மருத்துவமனைகள் திறக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு ஆர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று கால்நடை வளர்ச்சிக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசிய அவர், கால்நடை தீவனப் பயிர்கள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - அமைச்சர் - 38 செகண்ட்ஸ்)

>><><><<

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையின் மதகுகளை தூய்மைப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கட்டிடத்தின் உட்புறத்தில் உள்ள உப்புப் படிவங்களை அகற்றும் பணி பிரத்யேக இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எமது செய்தியாளர் கூறுகிறார்.

(வாய்ஸ் பைட் - மூர்த்தி – 45 செகண்ட்ஸ்)

>><><><<

வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா, அரசுமுறைப் பயணமாக ஆப்பிரிக்க நாடான லெசோத்தோ சென்றுள்ளார்.

அந்நாட்டின் **Maseru** நகருக்குச் சென்றுள்ள அவர், இன்று லெசோத்தோ வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

மேலும் அந்நாட்டின் தொலைதொடர்பு. அறிவியல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர்களையும் திரு. பபித்ரா மார்கரிடா சந்திக்க உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், லெசோத்தோ தலைவர்களுடனான தமது சந்திப்பு இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

>><><><<

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய லஷ்கர் ஈ தொய்பாவின் துணை அமைப்பான த ரெசிடன்ட் ஃப்ரண்ட் அமைப்பை அமெரிக்காவின் வெளியுறவுத் துறை வெளிநாட்டு தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் வெளியுறவுத் துறை விவகாரங்களுக்கான நாடாளுமன்றக் குழு கடந்த ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி பஹல்காமில் நடத்திய தாக்குதலில் 26 அப்பாவி பொதுமக்கள் கொடூரமாக கொல்லப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து செயல்படும் லஷ்கர் ஈ தொய்பாவின் போர்வையில் இந்த அமைப்பு செயல்பட்டு வருவதையும் அமெரிக்க வெளியுறவுத் துறை விவகாரங்களுக்கான நாடாளுமன்றக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

>><><><<

சிரியாவின் **Suwayda** மாகாணத்தில் கடந்த ஒருவார காலமாக நீடித்த பிரிவினைவாத மோதல்களில் 800க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக சிரியா மனித உரிமைகள் காப்பகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் **Druze** போராளிகள், **Bedouin** பழங்குடியினர் மற்றும் சிரியா அரசுக்கு இடையே கடந்த 13 ஆம் தேதி மோதல் தொடங்கியது.

இந்நிலையில் சிரிய அதிபர் திரு **Ahmed Al Sharaa -** வால் போர் நிறுத்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் ஏற்பட்டதை அடுத்து தற்போது அமைதி நிலவுவதாகவும் **Bedouin** போராளிகள் **Suwayda** மாகாணத்தில் இருந்து வெளியேற உறுதி செய்ய சிரிய பாதுகாப்பு படைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

>><><><<

ஜம்மு கஷ்மீரில் கிஸ்துவார் மாவட்டத்தில் உள்ள கன்கு வனப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டையை மேற்கொண்டுள்ளனர்.

அப்பகுதியில் பதுங்கியுள்ள ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களை தேடும் பணியில் டிரோன்கள் மற்றும் மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே, ரியாஸ் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் வைஷ்ணவ் தேவி கோயிலுக்கு பயணம் மேற்கொண்டிருந்த 4 யாத்ரீகர்கள் காயமடைந்தனர்.

அப்பகுதியில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீட்புப் படையினர் தொடர்ந்து தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

>><><><><<

*விளையாட்டுச் செய்திகள்*

நடப்பு ஆண்டுக்கான ஃபிடே உலகக்கோப்பை செஸ் போட்டிகள் இந்தியாவில் நடைபெறும் என்று சர்வதேச செஸ் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அக்டோபர் 30 ஆம் தேதி முதல் நவம்பர் 27 ஆம் தேதி வரை இப்போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<